**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

| | | |
|---|---|---|
| Case No. | : | STC No.98/2026 |
| Deposition of witness for Prosecution | : | P.W-9 |
| Name | : | ரவிச்சந்திரன், வயது 57 |
| Father Name/Husband Name | : | சுப்புராஜ் |
| Village | : | சிந்தலக்கரை |
| Taluk | : | எட்டையபுரம் |
| Calling | : | சிறப்பு உதவி ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 27th day of August 2026.

**(Accused absent. u/s 317 Cr.P.C PFA)**

**<u>முதல் விசாரணை</u>**

1 நான் தற்போது கொப்பம்பட்டி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் உள்ளேன். நான் இதற்கு முன்பு நாலாட்டின்புதூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது 04.03.2024 ஆம் தேதி 19.30 மணிக்கு பிச்சாண்டி மகன் ரமணன் வயது 48/2024 என்பவர் நிலையம் ஆஜராகி பெண் சிறப்பு உதவி ஆய்வாளர் மணிமேகலா என்பவரிடம் புகார் மனு கொடுத்து மனு ரசீது பதிவு செய்யப்பட்டதை நான் பார்வையிட்டு அதன் தன்மைக்கு ஏற்ப 05.03.2024 ஆம் தேதி 17.30 மணிக்கு நிலைய குற்ற எண்.34/2024 இ.த.ச. பிரிவுகள் 323, 506(i) ஆக வழக்கு பதிவு செய்தேன். (**அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

2 அசல் புகார்மனு மற்றும் முதல் தகவல் அறிக்கையை கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பியும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும் விசாரணை நகலை உதவி ஆய்வாளர் பார்வைக்கும் வைத்தேன். இது சம்பந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

3. அரசு தரப்பு வழக்குப்படி சம்பவம் 04.03.2024 ஆம் தேதி, மதியம் 02.10 மணி ஆகும். காவல் நிலையத்தில் 04.03.2024 ஆம் தேதி இரவு 07.30 மணிக்கு புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அ.சா.1 05.03.2024 ஆம் தேதி மதியம் 03.50 மணிக்கு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தார் என்றால் அதை புலன் விசாரணை அதிகாரியிடம் தான் கேட்க வேண்டும். காவல் நிலையத்திற்கு காயத் தகவல் எப்போது கிடைத்தது என்றால் அதை புலன் விசாரணை அதிகாரியிடம் தான் கேட்க வேண்டும்.

4. அ.சா.1 மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்த பிறகுதான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அ.சா.1 மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்து அழுத்தம் கொடுத்தால் இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை 06.03.2024 ஆம் தேதி காலை 10.50 மணிக்கு நீதிமன்றத்திற்கு வரப்பட்டது என்றால் நான் சரியாக அனுப்பி விட்டேன், நீதிமன்றத்திற்கு கால தாமதமாக வந்துள்ளது. இந்த வழக்கிற்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய எந்த முகாந்திரமும் கிடையாது என்றாலும், நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court
in the presence of accused and
read over to the witness and
acknowledged by him/her to be
Correct.

Sd/ Tr. K. Anand, B.A, M.L.,
Judicial Magistrate No.1,
Kovilpatti.